


துணை முதலமைச்சர் அவர்கள் 11.06.2025 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் ரூ.399.81 கோடி மதிப்பீட்டில் முடிவுற்ற 102 திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, ரூ.975.63 கோடி மதிப்பீட்டில் 108 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, கல்வி ஊக்கத்தொகை மற்றும் பணி நியமன ஆணைகளை வழங்கினார். அதனைத்தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி பேரூராட்சி, மேம்படுத்தப்பட்ட வாரச்சந்தையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில் கலந்துகொண்டார். உடன், ஆலங்குடி பேரூராட்சித் தலைவர் திருமதி.மு.ராசி முருகானந்தம், செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) ஜீவா சுப்பிரமணியன், பேரூராட்சி செயல் அலுவலர் அ.சுந்தரராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி சட்டமன்ற தொகுதி சீர்காழி மேற்கு ஒன்றியம் எடக்குடி வடபாதி கிராமத்தில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் .சிவ. வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த், மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இராம.இளங்கோவன், மாவட்ட கழகப் பொருளாளர் மகா.அலெக்சாண்டர்,சீர்காழி மேற்கு ஒன்றிய செயலாளர் ஏ.ஜி.ஜே.பிரபாகர், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சுவாமிநாதன் மற்றும் பலர் உள்ளனர்.

# ஜெயங்கொண்டம் புதிய மின்வாரிய கோட்ட அலுவலகம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்!

அரியலூர், ஜூன் 14-

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சன்னதி தெருவில் தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள ஜெயங்கொண்டம் கோட்டம் புதிய செயற்பொறியாளர் / இயக்குதலும் & காத்தலும் அலுலவகத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க பெரம்பலூர் மின்பகிர்மான வட்டத்திற்குட்பட்ட அரியலூர் மாவட்டத்தில், மின் நுகர்வோர்களின் குறைகளை உடனுக்குடன், நிவர்த்தி செய்யவும், தடையில்லா தரமான மின்சாரத்தை வழங்கிடவும். ஒரே கோட்டமாக செயல்பட்டு வந்த அரியலூர் கோட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு புதிய ஜெயங்கொண்டம் கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி புதிய செயற்பொறியாளர் / இயக்குதலும் & காத்தலும் அலுலவகத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சா.சிவசங்கர் திறந்து வைத்து, பார்வையிட்டார்.

அந்தவகையில் புதிய கோட்டத்தின் கீழ் உதவி செயற்பொறியாளர் /நகரம் / ஜெயங்கொண்டம், உதவி செயற்பொறியாளர் / கிராமியம் / ஜெயங்கொண்டம் மற்றும் உதவி செயற்பொறியாளர் / ஆண்டிமடம் ஆகிய உபகோட்டங்கள் மற்றும் நகர் / ஜெயங்கொண்டம், வடக்கு / ஜெயங்கொண்டம், உடையார்பாளையம், சுத்தமல்லி, த.பழூர், மீன்சுருட்டி, வடக்கு / ஆண்டிமடம், தெற்கு / ஆண்டிமடம், பாப்பாகுடி, பெரியாத்துக் குறிச்சி ஆகிய 10 பிரிவு அலுவலகங்கள் செயல்படும். மேலும் 10 எண்ணிக்கையிலான துணை மின் நிலையங்கள் ஜெயங்கொண்டம் கோட்டத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும்.

இதுவரையில், ஜெயங்கொண்டம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதியில் உள்ள மின் நுகர்வோர்கள், மின்சாரம் தொடர்பான தங்களது கோரிக்கைகளை அரியலூரில் உள்ள செயற்பொறியாளரை அணுகி நிவர்த்தி செய்து வந்தார்கள். தற்பொழுது புதிய கோட்ட அலுவலகம் ஜெயங்கொண்டத்திலேயே துவக்கப்பட்டதால், மேற்கண்ட பிரிவு அலுவலகத்திற்குட்பட்ட சுமார் 1,38,000 மின் நுகர்வோர்கள் தங்களது மின்சாரம் தொடர்பான கோரிக்கைகளை உடனுக்குடன் நிறைவேற்றிக்கொள்ளவும். மின் நுகர்வோர்களுக்கு தரமான தடையில்லா மின்சாரத்தினை விரைந்து வழங்கிடவும், சிறந்த நுகர்வோர் சேவை வழங்கிட பயனுள்ளதாக அமையும் வகையில் புதிய மின்வாரிய கோட்ட அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது.

புதிய கோட்ட அலுவலகத்தினை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து செய்தியாளர்கள் சந்திப்பின்போது தெரிவித்ததாவது:

தமிழ்நாடு மின் பகிர்மான கழகத்தின் பெரம்பலூர் கோட்டத்திலிருந்து ஏற்கனவே செயல்பட்டு வந்த அரியலூர் கோட்டத்திலிருந்து புதியதாக ஜெயங்கொண்டம் பிரிக்கப்பட்டு ஜெயங்கொண்டம் கோட்ட அலுவலகம் இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த கோட்டத்தில் சுமார் 1,38,000 மின் நுகர்வோர்கள் உள்ளனர். இதுவரை அரியலூர் அலுவலகத்திற்கு சென்று தங்களது மின்சாரம் தொடர்பாக குறைகளுக்கு தீர்வு காணும் நிலை மாறி இன்று ஜெயங்கொண்டத்திலேயே உருவாக்கப்பட்டுள்ள அலுவலகத்திலேயே மின்சாரம் தொடர்பான குறைகளுக்கு தீர்வு காணும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் கீழ் 3 உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களும், 10 பிரிவு அலுவலகங்களும் செயல்படும். 10 துணை மின் நிலையங்கள் இக்கோட்டத்தில் இருக்கும்.

ஏற்கனவே அரியலூர் மாவட்டத்திற்கு ஒரு மின் கோட்டம் இருந்தது. மேலும் ஜெயங்கொண்டம் பகுதியில் அதிக அளவில் விவசாய பகுதிகள் உள்ளது. மின்சாரம் தொடர்பான குறைகளுக்கு 30 கி.மீ வரை பயணம் செய்யக்கூடிய நிலை இருந்தது. தற்போது ஜெயங்கொண்டத்தில் புதிய கோட்டம் உருவாக்கப்பட்டுள்ளதால் இனி ஜெயங்கொண்டம் அலுவலகத்திலேயே குறைகளுக்கு தீர்வு காணப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டில் பொதுமக்கள் குறைகளுக்கு எளிதில் தீர்வு காணும் வகையில் புதிய மின் கோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் இன்றையதினம் ஜெயங்கொண்டம் புதிய கோட்ட அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.


இந்த கோடையில் எதிர்பாராத விதமாக கோடை மழை அதிகமாக இருந்தது. சுழல்காற்றும் வீசுகின்ற புதிய நிலை இருந்தது. இதன் காரணமாக பல இடங்களில் மின் கம்பங்கள் சாய்வதும் அதனால் மின்சாரம் தடைபடுவதுமாக இருந்தாலும் உடனடியாக மின்துறை ஊழியர்களின் துரிதமான செயல்பட்டால் அனைத்து இடங்களிலும் 24 மணி நேரத்திற்குள் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த மாதத்தில் இதே போன்ற நிலை திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்பட்டது. அதன் பிறகு கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரே நேரத்தில் 500 மின் கம்பங்கள் சாய்ந்தது. அங்கு 2 நாட்களில்; மீண்டும்; புதிய மின் கம்பங்கள் நடப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டது. இது தொடர் நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்போது பருவமழையும் முன்கூட்டியே துவங்கி இருக்கிற சூழலில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்து பணிகளுக்கும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தியுள்ளார்கள்.

எனவே பொதுமக்களுக்கு பாதிப்பு இல்லாமல் எல்லா வகையிலும் இத்துறை செயல்படும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருச்சி தலைமை பொறியாளர் கீதா, மேற்பார்வை பொறியாளர், பெரம்பலூர் மேகலா, உடையார்பாளையம் வருவாய் கோட்டாச்சியர் ஷீஜா, நகர்மன்ற தலைவர் சுமதி சிவக்குமார், ஜெயங்கொண்டம் நகர் மன்ற துணைத்தலைவர் வெ.கொ.கருணாநிதி, செயற்பொறியாளர் அய்யனார், ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் சம்பத்குமார், கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணை செயலாளர் சுபா.சந்திரசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி. பாலசுப்பிரமணியன், மாவட்ட துணை செயலாளர் மு.கணேசன், ஒன்றிய பொறுப்பாளர்கள் ஆர்.கலியபெருமாள், இரா.அண்ணாதுரை, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மின்துறை அலுவலர்கள் மற்றும் இதர அரசு அலுவலர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



கோவை மாவட்ட அனைத்துவகை மாற்றுத்திறனாளிகள் நலச் சங்கம் நடத்திய முப்பெரும் விழாவில் மாற்றுத்திறனாளி குழந்தைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குழந்தைகள் உள்ளிட்ட 120 பேருக்கு 2025 – 2026 கல்வி ஆண்டிற்கான கல்வி உபகரணங்களை கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வழங்கி மாற்றுத்திறனாளி தொழிலாளர்களை பாராட்டி, பள்ளி பொதுத் தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார். உடன் பேரூராட்சி மன்ற தலைவர் அண்ணாதுரை உள்பட மாற்றுத்திறனாளிகள் நலச் சங்க தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



ஈரோடு நகர தி.மு.க. இளைஞர் அணி முன்னாள் அமைப்பாளர் ஆர்.எஸ்.தம்பி 11.06.2025 அன்று இயற்கை எய்தினார். தகவல் அறிந்ததும் கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் நேரில் சென்று அவரது குடும்பத்திற்கு ஆறுதல் கூறி நிதி உதவி அளித்தார்.




கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றியம், அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் பெண்ணேஸ்வரமடம் ஊராட்சியில் ரூ.47.21 இலட்சம் மற்றும் அகரம் ஊராட்சியில் ரூ.46.81 இலட்சம், எருமாம்பட்டி ஊராட்சியில் ரூ.48.67 இலட்சம், தளிஅள்ளி ஊராட்சியில் ரூ.49.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் பல்வேறு பணிகளை துவக்கி வைத்தும், நாகோஜனஅள்ளி பேரூரில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களது 102வது பிறந்த நாளையொட்டி தி.மு.க. கொடியேற்றி, இனிப்புகள் வழங்கியும், தூய்மை பணியாளர்களுக்கு அறுசுவை உணவுகளை வழங்கியும், பொதுமக்களின் பயன்பாட்டிற்காக புதிய நியாயவிலைக்கடை திறந்து வைத்தும், வேலம்பட்டியில் கலைஞர் மேம்பாட்டு நிதி திட்டத்தில் ரூ.69 இலட்சத்தில் தார்ச்சாலை அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் 11 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பயணிகள் நிழற்குடையை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சிகளில் காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மகேந்திரன், நாகரசம்பட்டி பேரூராட்சி தலைவர் தம்பிதுரை உள்ளிட்ட இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர் .